# புகழ்ச்சிக்கூட்டநற்செய்தி

2017 ஆவணி மாதம் 14ம் திகதி முதல் ஆவணி மாதம் 20ம் திகதி வரை

## *“துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்”*

01. ஆரம்ப புகழ்ச்சி : புபுது பாடல் இல. 10 “தூய ஆவியானவரே….”

- இறைவனைப் புகழ்வதற்கான கொடைகளைப் பெற்றுள்ளதானது எமக்கு கிடைத்துள்ள மகோன்னத பாக்கியமாகும். வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற, கடக்கின்ற, எத்தகைய சந்தர்ப்பத்திலும் புகழ்வதற்கான தாகத்தை எமக்குள் ஏற்படுத்தும் தூய ஆவியானவருக்கு அதிகமதிகமாக இடமளித்தவாறு இன்றைய நாளில் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம். புகழ்ச்சியின் போது நாம் அனுபவிக்கும் வல்லமை, நம்மை விடுவிப்பதாக, விடுதலை செய்வதாக விசுவசித்தவண்ணம் புகழ்வோம்.
- புபுது பாடல் இல103“போற்றிப் புகழ்வோம்……”

02. புனித மத்தேயு 5:4 (பொதுவில் வெளிப்படுத்தவும்)
“துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்”

நாம் செவிமடுத்த இறைவார்த்தை உறுதியாகவே எமது வாழ்வினைப் புதுமைக்கும், ஆறுதலுக்கும் உட்படுத்துகிறது இல்லையா? ஆண்டவர் கூறும் பாக்கியங்களை மனித புத்தியினால் தெளிவுபடுத்திட முடியாது. “துயருறுவோர் பேறுபெற்றோர்” என்று கூற கூடிய மனிதர் யாராவது இருக்கின்றார்களா? துயருறுவோர் ஆறுதலடைவது எவ்வாறு? மனிதர்களாகிய எமக்கு கவலை, வேதனை என்பன துயரமேயாகும். இன்னுமொரு பக்கத்தில் துயருறுவது அபாக்கியமான, துரதிர்ஷ்டமானதாக நாம் கருதுகிறோம். இருப்பினும் கிறிஸ்தவர்களாகிய நமக்கு துயருறுவதில் இருக்கும் பாக்கியம், சந்தோஷம் என்பனவற்றை ஆண்டவர் அவரது வாழ்வினூடாக வெளிப்படுத்தியுள்ளார். சிலுவை மரணம் வேதனையானாலும் துயரமானாலும், முழு உலகையே மீட்பதற்கு சக்தி, வல்லமை கிடைத்தது அந்த மரணத்தினாலேயே. ஆகையால் துயருறுவதினூடாக இறைவனை நெருங்குவதற்கு எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம், ஆறுதல் பெறுவதற்கு எமக்கு வழிகாட்டல் தரும்.

03. எம் பக்கம் :

- இயேசுகிறிஸ்து ஆண்டவருக்காக துன்புறுதல் மற்றும் கஷ்டப்படுதலினூடாக ஏற்படும் துயரத்தை அனுபவிக்கக் கிடைப்பது உண்மையாகவே பாக்கியமாகும். கிறிஸ்தவர்கள் என்றவகையில் எமக்குக் கிடைத்திருக்கும் அழைப்பு அதுவே. (அருகிலிருப்பவருடன் பகிரவும்)
- நாம் துயருறுகையில் நாம் எவ்வளவு தூரம் விழிப்புறுகிறோம்? துயருறுதலின் வழியாக இறைவனை அனுபவித்திட இருக்கின்ற சந்தர்ப்பங்களுக்கு விழிப்புறுகிறோமா?
- இல்லையெனில் நாம் அனுவிக்கும், கடக்கும் நிலைகளுடன் வெறுப்பு (வேண்டாமென்ற நிலை), அதிருப்தி என்பன எமது வாழ்வினை மூடிக்கொண்டுள்ளதா?

- “துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்” நாம் எமது வாழ்வில் இந்தபேற்றினை அனுபவிக்கிறோமா?

04.வாரம் முழுவதும்

- இறை இயேசுவிற்காக துயருறும் பாக்கியத்தினை அனுபவித்து ஆறுதல் பெறுவோம்.

05. இறுதி செபம்: புபுது பாடல் இல. 124 “அமைதியின்…”